செ.கு.எண்: 441

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 7.12.2012

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ஆறுமுகம் அவர்கள் 11.11.2012 அன்று விழுப்புரம் மாவட்டம், ஓலக்கூர் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 4.12.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. வரதராஜ பெருமாள் அவர்கள் 26.11.2012 அன்று ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்குப்பட்டு சிகிச்சை பலனின்றி 4.12.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை தலைமைக் காவலர்கள் திரு. ஆறுமுகம் மற்றும் திரு. வரதராஜ பெருமாள் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை விபத்தில் காலமான தலைமைக் காவலர் திரு. ஆறுமுகம் மற்றும் மாரடைப்பால் காலமான தலைமைக் காவலர் திரு. வரதராஜ பெருமாள் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9